RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s317

# ஆளுமைகளை கண்டறியும் சாதனங்கள்

அ. வசந்தி [அ, *]

[அ] தமிழ்த்துறை, போப் கல்லூரி, சாயர்புரம், தூத்துக்குடி-628251, தமிழ்நாடு, இந்தியா.

# Devices for Detecting Personalities

A. Vasanthi [a, *]

[a] Department of Tamil, Pope's College, Sawyerpuram, Thoothukudi-628251, Tamil Nadu, India

* Corresponding Author: vasanthiraj@gmail.com

Received: 07-03-2021
Revised: 26-08-2021
Accepted: 17-09-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

The man living in society wants to identify himself with the distinctive features. He will perform deeds, clothing, food and custom that are praiseworthy to existing men. He wants himself to be favoured by the men surrounded by him and if it happens he feels like he has achieved something great. Personality traits can be examined from many angles. Home, language, culture, educational institutions. Skills, actions are detected as some of the things of personality. This article explains the techniques of personality.

**Keywords:** Personality, Skills, Culture, Devices

## முன்னுரை

சமுதாயத்தில் வாழ்கின்ற மனிதன் தனக்கேற்ற தனித்திறமைகளுடன் அடையாளம் பதிக்கும் முறையில் உலாவுகிறான். அதில் உடை, உணவு, பழக்கவழக்கங்கள், உணர்வுரீதியான செயல்பாடுகள் மூலம் தன் அருகில் இருக்கும் மனிதர்கள் புகழும் செயல்களைச் செய்வான். அடுத்தவர்கள் மனதில் இடம் பிடித்தால் ஏதோ ஒரு ஆளுமையில் வளர்ச்சியடைந்ததாக தன்னை அறிமுகப்படுத்துவான். அவ்வாறு அறிமுகப்படுத்தும் ஆளுமைகளின் நுட்பங்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ஆளுமை என்பது ஒருவரின் குறிப்பிட்ட குணாதிசயம் பற்றியதல்ல, அநேக சிறப்பியல்புகளின் சேர்க்கை ஆகும். பர்ஸனாலிட்டி என்றால் லட்சணமாய் பள, பள உடையில் இருக்க வேண்டும் எனச் சொல்ல இயலாது, மனிதர் கறுப்பாய், குட்டையாய், தலை வழுக்கையாகக் கூட இருக்கலாம் என்பது பலருடைய கருத்தாக்கமாக அமைந்துள்ளது.

பண்டிட் ஜவஹர்லால் நேரு, சட்டையில் ரோஜா குத்திக் கொண்டிருந்ததால் மக்கள்பால் அவர் ஈர்க்கப்பட்டுவிடவில்லை. அவரே ஒரு ரோஜாவாக இருந்தார். அவருடைய கவர்ச்சியான புன்னகையும், மனித நேயமும் தான் கோடானக் கோடி, மக்களைக் கட்டிப் போட்டது. பிறரிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதும், எல்லாரையும் தங்கள் பக்கம் திரும்ப வைப்பதும் பர்ஸனாலிட்டி என்று கூறினால் மிகையாகாது.

## ஆளுமைப் பொருள்

"முகமூடி என்கிற பொருளைத் தரும் 'பர்சோனா' என்கிற லத்தீன் சொல்லில் இருந்து தோன்றியது தான் 'பர்சனாலிடி' என்கிற ஆங்கில வார்த்தையாகும். பழங்காலத்தில் கிரேக்க நாடக,

நடிகர்கள் தங்களுடைய முகத்தை முகமூடிகளைக் கொண்டு மறைத்த படி மேடையில் தோன்றுவார்கள். இதைப் பார்ப்பவர்கள் தங்கள் விருப்பத்துக்கு ஏற்பக் கதாபாத்திரங்களைக் கற்பனை செய்து கொள்வார்கள் (Santhanam, 1987).

அப்படித்தான் பர்சனாலிடி என்ற சொல்லின் பொருள் ஒருவருடைய நடத்தைகளைக் குறிப்பிடும் பொருளாக மாறியது. ஆனால் அப்பொருள், உருவத்தை எடுத்துக்காட்டிய அளவுக்கு உண்மையைச் சுட்டிக் காட்டவில்லை.

## ஆளுமை விளக்கம்

ஆளுமை என்ற சொல்லுக்குப் பல்வேறு விளக்கங்களை அறிஞர்கள் தருகின்றார்கள். “ஆளுமையானது ஒருவனது பண்புகளின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு” என்று கில்போர்ட் குறிப்பிடுகிறார் (Santhanam, 1987).

“ஆளுமை எனப்படுவது ஒருவனுடைய உடற்பண்பு, மனப்பண்புகள், மனப்போக்குகள், சமூக அறநெறிப் பண்புகள் போன்ற எல்லாப் பண்புகளின் கலவை என்கிறார் (Santhanam, 1987).

“தனிமனிதனுடைய எண்ணங்கள், நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, மனப்பான்மைகள், அவனுடைய வாழ்க்கைத்தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகிய யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மையே ஆளுமை என்று வாழ்வியற் களஞ்சியம் ஆளுமைப் பண்பை விளக்குகின்றது (Saradhammal, 2005).

## ஆளுமையைத் தீர்மானிப்பவை

ஒருவர் உண்மையில் எப்படி உள்ளார் என்பதை விட அவர் மற்றவர்களுக்கு எப்படிக் காணப்படுகிறார் எனப் பொருள் கொள்வதே ‘ஆளுமை’ ஆகும்.

ஆளுமை என்பது தனி மனிதனுடைய எண்ணங்கள். செயல்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, மனப்பான்மைகள், அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகிய அனைத்தும் அவனுக்குள் உருவாக்கும் தனித்தன்மைகளை ஆளுமை எனக் கூறலாம்.

## ஆளுமையின் வகைகள்

சமூகத்தின் பார்வையில் ஆளுமை என்பது மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. 1. விரும்பத்தக்க ஆளுமை, 2. விரும்பத்தகாத ஆளுமை, 3. கலப்பு ஆளுமை

### விரும்பத்தக்க ஆளுமை

“ஒருவர், தனக்கும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் இடையே பல்வேறு நிலைகளில் இயங்க வேண்டியிருக்கிறது. அந்த மாதிரி நிலைகளில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றால், அவர் தன்னுடைய சமூகமும் நிறுவனமும் விரும்பத்தக்க ஆளுமையைக் கொண்டவராக இருக்க வேண்டும்” (Saravanan, 2015).

### விரும்பத்தகாத ஆளுமை

“ஒருவர், தனக்கும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் ஏற்ற வகையில் சிறப்பாகச் செயல்படவில்லை என்றால், அவர் தன்னுடைய சமூகம் அல்லது நிறுவனத்தால் விரும்பத்தகாத ஆளுமை கொண்டவராக வாழ வேண்டியதாகி விடும்” (Saravanan, 2015).

### கலப்பு ஆளுமை

“ஒருவர், தனக்கும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் ஓரளவு விரும்பத்தக்க ஆளுமை கொண்டவராகவும், சில செயல்பாடுகளில் விரும்பத்தகாத ஆளுமை நிறைந்தவராகவும் இருக்க நேர்வதே கலப்பு ஆளுமை” (Saravanan, 2015).

## ஆளுமையின் தன்மைகள்

மனிதன் “செயற்படு முறைகள்” அல்லது நடத்தைக் கோலங்கள் அவனது ஆளுமையின் தன்மையை வெளிப்படுத்துகின்றன” (Santhanam, 1987).

“நடத்தையை ஊன்றிக் கவனித்தால் அவனது நடத்தையில் சில அடிப்படைப் போக்குகளை நம்மால் கண்டறிய முடியும். இப்போக்குகளின்படி எந்நிலைமைகளிலும் நடந்து கொள்வான். இப்படி நடந்து கொள்வதும் ஆளுமையாகும்” (Santhanam, 1987).

“மனிதன் தன் பாரம்பரியத்தினாலும், சூழ்நிலையினாலும் பெற்றுள்ள உள்ளார்ந்த மனப்போக்குகள், உளத்துடிப்புகள் செய்முறைகள், உடல் வேட்கைகள் மற்றும் இயல்பூக்கங்கள் இவற்றின் தொகுப்பே ஆளுமையாகும்” என உட்வொர்த் குறிப்பிடுகிறார் (Santhanam, 1987).

## சமூகக் காரணிகள்

இல்லம், பள்ளிக்கூடம், மொழி, பண்பாடு ஆகியவை ஆளுமை மீது செல்வாக்கு செலுத்தும் சமூகக் காரணிகளாகும்.

### இல்லம்

இல்லத்தில் செயல்படும் பல்வேறு ‘சக்திகள்’ ஆளுமை வளர்ச்சிக்கு உரியனவாகக் காணப்படுகின்றன.

### பள்ளிக்கூடம்

ஆசிரியர்கள், தலைமையாசிரியர், மாணவர்கள், இவர்களின் ஆளுமையினைப் பள்ளியில் காண முடிகிறது. பள்ளிக் கட்டுப்பாடு, பள்ளி வேலை நேரம், பள்ளியின் தரம், பள்ளியில் காணப்படும் நிறுவனச் சூழல், பாடத் தொடர்புடைய வகுப்பறைச் செயல்கள், வகுப்பிற்கு வெளியே காணப்படும் துணைச் செயல்களில் ஆசிரியர் மாணவர்களின் பங்களிப்பு போன்றவை ஆளுமைப் பண்புகளை வளர்க்க உதவுகின்றன.

### மொழி

ஆளுமையை வளர்ப்பதில் மொழிக்குப் பங்குண்டு. உணர்வுகளை அறிந்து கொள்வதற்கு, மொழி துணைபுரிகிறது. மொழி மற்றவர்களின் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள வழி; செய்கிறது.

### பண்பாடு

ஆளுமை வளர்ச்சியில் பண்பாடு பெரிய அளவில் இடம்பெற்றுள்ளது. ஒவ்வொருவரும் தாங்கள் சார்ந்திருக்கும் சமுதாயத்தில் சமூக வாழ்க்கையின் மூன்று முக்கிய கூறுகளாகத் தொழில், திருமணம், பிறருடன் பொருத்தமான உறவு கொண்டுப் பழகுதல் ஆகியவற்றில் வெற்றி பெற முனைகின்றனர். உடை உடுத்தும் முறை, உண்ணும் முறை, குழந்தை வளர்ப்பு, திருமணம், நம்பிக்கைகள், மரபுகள் ஆகியவைகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம், பண்பாட்டுக் கூறுகளில் காணப்படும் வேற்றுமைகள்,

வெவ்வேறு பண்பாட்டுச் சூழலில் வளரும் பலரின் ஆளுமைகளைப் பிரதிபலிக்கின்றன. சமுதாய அமைப்பு மற்றும் பண்பாடும் நல்ல ஆளுமை வளர்ச்சிக்கு காரணமாக உள்ளது.

## ஆளுமையை பாதிக்கக்கூடிய காரணிகள்

"ஆளுமையை பாதிக்கக் கூடிய காரணிகளை இரண்டு குழுக்களாகப் பிரிக்கலாம். பாரம்பரியம், உடம்பின் வடிவம் போன்றவற்றைக் கொண்டுள்ள காரணிகளை மாற்ற இயலாது. உடை அணியும் பாணி, அறிவுத்திறன், நடத்தை போன்ற இரண்டாம் வகைக் காரணிகளை மாற்ற முடியும். ஒருவருடைய அடிப்படை அமைப்பை மாற்ற இயலாமல் போனாலும் மாறுதலுக்கு உட்பட்ட காரணிகளை உரிய வழிகாட்டுதல், வளர்ப்பு முறை, வாய்ப்பு கல்வி, பயிற்சி போன்றவற்றின் மூலம் சீர்படுத்தி ஆளுமையை மேம்படுத்த முடியும் (Saravanan, 2015).

## முடிவுரை

ஆளுமை என்ற சொல்லுக்கு ஒரு தனிமனிதனின் தனித்தன்மை, தனிமனிதச் சிறப்பியல்பு, தனிமனிதப் பண்பியல் என்று பல நோக்கில் ஆராயலாம். ஆளுமையின் செல்வாக்கு சாதனங்களாக இல்லம், மொழி, பண்பாடு, கல்விக்கூடங்களில் தனிமனிதனின்; அறிவாற்றல் பண்பு, திறமைகள், செயல்கள் மூலம் கண்டறியலாம்.

## References


Muthaiya. N., (1980) Alumaik kalajiyam Thoguthi, Madurai Kamarasar University, Madurai, India.

Paati, J.R., (2011) Alai Asaththum Alumai, Vikadan Pirasuram,

Santhanam, S., (1987) Kalvin Ulaviyal adipadaikal, Sandha Pathippagam, Chennai, India.

Saradhammal, S., (2005) Ilakkiyamum Ula Pagupaivu, Hariharan Pathippagam, Madurai, India.

Saravanan, S., (2015) Aalai Asaththum Alumai, Uma Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License